Impact Factor (SJIF): 6.092 E-ISSN: 2583-1615

International Journal of Research in Academic World

Received: 17/February/2023 IJRAW: 2023; 2(3):105-110 Accepted: 26/March/2023

# திருவிவிலியத்தில் இயேசுவின் புதுமைகளில் நெய்தல் நிலம்

*[1]ந.ஆ. வேளாங்கண்ணி

*[1]முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை, தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர், தமிழ்நாடு, இந்தியா.

**Abstract**

இறைமகன் இயேசு கிறிஸ்து தமது வாழ்க்கையில் பல புதுமைகள் நிகழ்த்தினார் என்று திருவிவிலியத்தில் உள்ள நான்கு நற்செய்தி நூல்களான மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவான் ஆகியவற்றின் வழியாக அறியமுடிகிறது. இயேசு நிகழ்த்திய புதுமைகளின் அடிப்படையே மக்களை நம்பிக்கை வாழ்விற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பதுதான். இத்தகைய நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டு ஏறக்குறைய முப்பத்தி நான்கு புதுமைகள் நிகழ்த்தியுள்ளார் என்று அறியமுடிகிறது. இப்புதுமைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை,

1. உடல் சார்ந்த புதுமைகள்
2. உணவு சார்ந்த புதுமைகள்
3. இயற்கை சார்ந்த புதுமைகள்

என மூன்று பிரிவுகளாகப் பிரித்து ஆய்வுக்கு உட்படுத்தலாம். ஆனால் இக்கட்டுரையில் இயற்கை சார்ந்த புதுமைகள் மட்டுமே ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது. எனவே இயற்கை சார்ந்த புதுமைகள் என்னெவென்றும்? ஏன் நிகழ்ந்தன? எங்கு நிகழ்ந்தன? இவை எந்த நிலத்திற்குரியவை? நெய்தல் நிலத்திற்குரியவையா என்றும்? அவ்வாறு அமைந்தால் அதற்கானச் சான்றுகள் உள்ளனவா என்றும்? நெய்தல் நிலத்தின் அடிப்படை விளக்கம் என்னவென்றும்? இதுபோன்ற கேள்விகளை முன் வைத்து ஆய்வாகவும் தேடலாகவும் இக்கட்டுரை அமைகின்றது.

**Keywords:** நெய்தல் நிலம், நேரம், இயேசுவின் புதுமை

## Introduction

### நெய்தல் நிலத்தின் அடிப்படை விளக்கமும் வகைப்பாடும்

மனிதன் ஒருவரை ஒருவர் சார்ந்து வாழ்ந்தாலும்கூட அடிப்படையாக இயற்கையோடு சார்ந்த வாழ்க்கை வாழ்கின்றான். நீர், நிலம், காற்று, நெருப்பு, ஆகாயம் என ஐம்பூதங்களின் அடிப்படையில் இவ்வுலகம் இயற்கையின் கட்டமைப்பில் இயங்குகிறது எனலாம். மெல்ல மெல்ல மனிதன் வாழ்க்கையை மேம்படுத்த நிலப்பரப்புகளை கட்டமைத்து வாழ்ந்தான் என்பதை இலக்கியங்கள் கொண்டு அறியமுடிகிறது. நிலப்பரப்பு குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகைத் திணைகளின் அடிப்படையில் கட்டமைக்கப்படுகிறது.

ஐந்திணைகளைப்பற்றிய குறிப்புகளைத் தமிழ் மொழியில் தோன்றிய இலக்கண நூலாகக் கருதப்படுகின்ற தொல்காப்பியம் விரிவாக எடுத்துரைக்கிறது. இத்திணைகளை அகத்திணைகள் மற்றும் புறத்திணைகள் என்று பிரித்து பொருள் கூறுவதோடு,

> "முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றே
> நுவலுங்காலை முறைசிறந்தனவே
> பாடலுள் பயின்றவை நாடும் காலை." [1]
> (தொல்.பொருள். 949)

*Corresponding Author: ந.ஆ. வேளாங்கண்ணி

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனப் பிரித்து விளக்கம் அளிக்கப்படுவதைக் காணமுடிகிறது.

**முதற்பொருள்**

முதற்பொருள் இரண்டு வகையாக நிலம், பொழுது எனப் பிரிக்கப்பட்டு பொருள் கூறப்படுகின்றது.

"முதல் எனப்படுவது நிலம்பொழுது இரண்டின்
இயல்பு எனமொழிப இயல்வு உணர்ந்தோரே."
[2] (தொல்.பொருள். 950)

எனத் தொல்காப்பியம் முதற்பொருளை இரு கூறுகளாகப் பிரித்து முன்வைத்துப் பேசுகிறது. இதில் நிலம் என்று குறிக்கும்போது,

"மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே." [3]
(தொல்.பொருள். 951)

என நிலங்களும் நிலத்திற்குரிய தெய்வங்களும் அடையாளப்படுத்தப்படுகின்றன. காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனவும் மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனவும் வயலும் வயலும் சார்ந்த இடமும் மருதம் எனவும் மணலும் மணல் சார்ந்த இடமும் நெய்தல் எனவும் அந்தந்த நிலங்களுக்ககுரிய தெய்வங்களான முல்லை நிலத்திற்கு திருமால், குறிஞ்சி நிலத்திற்கு முருகன், மருத நிலத்திற்கு இந்திரன், நெய்தல் நிலத்திற்கு வருணன் என்று முறையாக முறைப்படுத்துகிறது தொல்காப்பியம்.
இங்கு

"வருணன் மழைக்கடவுளாகவும் ஆறுகள், கடலைக் காப்பவனாகவும் அடையாளப்படுத்தப்படுகிறான். ரிக் வேதகாலக் கடவுளான வருணனின் தாக்கம் தொல்காப்பியர் காலத்தில் இருந்திருக்கலாம்." [4]

என்கிறார் பாலசுப்பிரமணியன். நெய்தல் நிலம் என்பது கடலும் கடல் சார்ந்த இடமும் என்பதனை தொல்காப்பியம் மணல் சார்ந்த பகுதி எனக் குறிப்பிடுகிறது. மேலும் பிற்காலத்தில் முல்லையும், குறிஞ்சியும் இயற்கையின் மாறுதலால் திரிந்த வறண்ட பகுதியே பாலை நிலம் எனப் பொருள்கொள்ள வேண்டியதாகிறது. பாலை நிலத்திற்குரிய தெய்வம் கொற்றவை என்பதை அறியமுடிகிறது. இவ்வாறு நிலத்தின் அடிப்படைக் கூறுகளாகப் பிரித்து பொருள் கொள்ளப்படுகிறது. நிலத்தையடுத்து பொழுதும் பிரித்து பொருள் கொள்ளப்படுகிறது. பொழுது பெரும் பொழுது சிறுபொழுது என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. பெரும்பொழுது என்பது ஒரு ஆண்டிற்கான ஆறு பிரிவுகளாகப் பிரித்தறியப்படுகிறது.

**அட்டவணை 1:** பெரும்பொழுதிற்கான ஆறு பிரிவுகள்

| வ.எண் | பெரும்பொழுது | திங்கள் |
|---|---|---|
| 1. | கார் | ஆவணி, புரட்டாசி |
| 2. | கூதிர் | ஐப்பசி, கார்த்திகை |
| 3. | முன்பனி | மார்கழி, தை |
| 4. | பின்பனி | மாசி, பங்குனி |
| 5. | இளவேனில் | சித்திரை, வைகாசி |
| 6. | முதுவேனில் | ஆனி, ஆடி |

பெரும்பொழுதானது இரண்டு மாதங்கள் வீதம் கணக்கிட்டு பிரிக்கப்படுகிறது. நெய்தல் நிலத்திற்குரிய பெரும்பொழுதாக இளவேனில், முதுவேனில் என பிரித்து பொருள்கொள்ள முடிகிறது.

**அட்டவணை 2:** சிறுபொழுதிற்கான ஆறு பிரிவுகள்

| வ.எண் | சிறுபொழுது | விளக்கம் | நேரம் |
|---|---|---|---|
| 1. | வைகறை | விடியற்காலை முதல் காவல் வேலை (கதிரவன் தோன்றுவதற்கு முன்) | 2-6 |
| 2. | காலை | இரண்டாம் காலம் (கதிரவன் தோன்றியதற்குப் பின்) | 6-10 |
| 3. | நண்பகல் | மூன்றாம் காலம் (பகற்பொழுதின் நடுப்பகுதி) | 10-2 |
| 4. | மாலை (எற்பாடு) | நான்காம் காலம் (கதிரவன் மறைகின்ற காலம்) | 2-6 |
| 5. | இரவு | ஐந்தாம் காலம் (முன் இரவு) | 6-10 |
| 6. | நல்லிரவு (யாமம்) | ஆறாம் காலம் (இரவுப்பொழுதின் நடுப்பகுதி | 10-2 |

சிறுபொழுதினை பகல் பொழுது மூன்றாகவும் இரவுப்பொழுதினை மூன்றாகவும் பிரித்து கணக்கிடப்படுகிறது. நெய்தல் நிலத்திற்குரிய சிறுபொழுது மாலை (எற்பாடு) என கணக்கிடப்படுகிறது. இதனையே

"கடலும் கடல் சார்ந்த இடமும், கார்,
இளவேனில், முதுவேனில் ஆகிய

பெரும்பொழுகளும் எற்பாடு ஆகிய
சிறுபொழுதுமே நெய்தல் திணையின்
முதற்பொருள்களாகும்." [5]

என்கிறார் பாலசுப்பிரமணியன், இவ்வாறு முதற்பொருளான நிலமும் பொழுதும் திட்டவட்டமாகக் கணக்கிடப்படுகிறது என்பதை அறியமுடிகிறது.

## கருப்பொருள்

முதற்பொருளை மையப்படுத்தி கருப்பொருள்கள் அமைகின்றன என்று தொல்காப்பியம் முன்வைத்துப் பேசுகிறது.

"தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப." [6]
(தொல்.பொருள்.964)

தெய்வம், உணவு, விலங்குகள் மரம்செடி கொடிகள், பறவை, தோற்கருவிகள், தொழில், யாழ் போன்ற நரம்புக் கருவிகள், ஊர், நீர், பூ போன்றனவும் கருப்பொருள் என்று கூறுவர். மேலும்,

"எந்நில மருங்கின் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்." [7]
(தொல்.பொருள்.965)

கருப்பொருள்களில் பூவும், பறவைகளும் எந்தநிலத்திற்குரியவை எனக் கூறப்பெற்றவை, பிற நிலங்களில் வந்தாலும் அந்த நிலத்தின் கருப்பொருளாகவே கொள்ள வேண்டும் என்று தெளிவாகத் தொல்காப்பியம் கூறுகிறது.

**அட்டவணை 3:** நெய்தல் நிலத்தின் கருப்பொருளகள்

| வ.எண் | கருப்பொருள் | கருப்பொருளுக்குரியவை |
|---|---|---|
| 1. | தெய்வம் | வருணன் |
| 2. | மக்கள் | சேர்ப்பன், புலம்பன், பரத்தி, நுளையர், நுளைச்சி, பரதர், அளவர், அளத்தியர், |
| 3. | பறவை | கடற்காகம், அன்றில், அன்னம் |
| 4. | விலங்கு | சுறாமீன் |
| 5. | ஊர் | பட்டினம், பாக்கம் |
| 6. | நீர் | உவர்க்குழி, மணற்கிணறு |
| 7. | பூ | நெய்தற்பூ, தாழம்பூ, முண்டகப்பூ, அடப்பம்பூ |
| 8. | மரம் | புன்னை, ஞாழல், காண்டல் |
| 9. | உணவு | மீனும் உப்பும் விற்றுப்பெற்ற பொருள் |
| 10. | பறை | மீன்கோட்பறை, நாவாய்ப் பம்பை |
| 11. | யாழ் | விளரியாழ், நெய்தல் யாழ் |
| 12. | பண் | செவ்வழிப் பண், நெய்தற் பண் |
| 13. | தொழில் | மீன்பிடித்தல், மீனுலர்த்தல், உப்புவிளைவித்தல், நாவாய் செலுத்துதல் |

மேற்காணும் அட்டவணையில் குறிப்பிட்ட கருப்பொருள்கள் அனைத்தும் நெய்தல் நிலத்திற்குரிய கருப்பொருள்களாகக் கருதப்படுகின்றன.

## உரிப்பொருள்

உரிப்பொருள் என்பது மனித வாழ்வையொட்டி அமைகின்றது. இவ்வுரிப்பொருளை ஐவகை நிலத்திற்கு தனித்தனியாகப் பிரித்து பொருள்கொள்ளப்படுகிறது.

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலை திணைக்குரியப்பொருளே." [8]
(தொல்.பொருள். 960)

எனத் தொல்காப்பியம் ஐவகை நிலங்களுக்கான உரிப்பொருளைக் குறிப்பிடுகிறது.

**அட்டவணை 4:** ஐவகை நிலங்களுக்கான உரிப்பொருள்

| வ.எண் | நிலம் | உரிப்பொருள் |
|---|---|---|
| 1. | குறிஞ்சி | புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |
| 2. | முல்லை | இருத்தலும் இருத்தல் நிமித்தமும் |
| 3. | மருதம் | ஊடலும் ஊடல் நிமித்தமும் |
| 4. | நெய்தல் | இரங்கலும் இரங்கல் நிமித்தமும் |
| 5. | பாலை | பிரிதலும் பிரிதல் நிமித்தமும் |

உரிப்பொருள் அக ஒழுக்கம், புற ஒழுக்கம் என இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. நெய்தல் நிலத்திற்கான அக ஒழுக்கம் என்பது இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். இரங்கல் என்பது தலைவி பிரிவு தாங்காது தலைவி வருந்துதல் எனப்படும். புற ஒழுக்கம் என்பது அரசர்கள் பகையின் காரணமாக எதிர் எதிர் நின்று போரிடுதல் ஆகும். போரின் போது

போர் வீரன் தும்பைப் பூச்சூடி போருக்குச் செல்வான் என்பதாகும்.

"தொல்காப்பியரின் திணை சார்ந்த கோட்பாடு திராவிட நிலப்பரப்பின் நிலம், காலம், சமூகம் இவற்றோடு இக்கூறுகளில் இருந்து உருவாகிய உணர்வியல் சார்ந்த கருத்தியல்களை (முதல், கரு, உரி) மையமாகக் கொண்டவை" [9] என்கிறார் ஜவகர்.

இவ்வாறு நெய்தல் நிலத்தின் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என வகைப்படுத்தி அவற்றிற்கான அடிப்படை விளக்கமும் அறியப்படுகிறது.

**இயேசு நிகழ்த்திய புதுமைகள்**

இயேசு தான் வாழ்ந்த இடங்களில் பல்வேறு புதுமைகளைச் செய்து சீடர்களையும் மக்களையும் நம்பிக்கையின் பாதையில் நெறிப்படுத்தினார் என்பதை திருவிவிலியத்தில் உள்ள நான்கு நற்செய்திகளின் வாயிலாக அறிப்படுகிறது. இப்புதுமைகளை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை, உடல், உணவு, இயற்கை சார்ந்தவைகளாகும்.

**உடல் சார்ந்த புதுமைகள்**

மனிதன் நீண்டநாள் வாழ்வதற்கு உடலும் உள்ளமும் ஆரோக்கியமாக இருத்தல் அவசியம் என இயேசு கருதினார். இதனால்தான் என்னவோ அதிகமான புதுமைகள் நலம் அளித்தவையாகத் தென்படுகின்றன. அவை, இரத்தப் போக்கினால் வருந்திய பெண் நலம் அடைந்தது, முடக்குவாத முற்றவர் குணம் பெற்றது, பார்வையற்றோர் பார்வை பெற்றது, சூம்பிய கையுடையவர் நலமடைந்தது, பேச்சற்றோர் பேசியது, காதுகேளாதவர் குணமானது, பேதுருவின் மாமியார் குணமானது, அரசு அலவலர் மகள் குணமடைந்தது, தொழுநோயாளர் நோய் நீங்கியது, பேய்பிடித்தவரை குணமாக்கியது, இறந்தவரை உயிர்ப்பித்தது. இதுபோன்ற புதுமைகள் உடல் சார்ந்தவைகளாக கருதப்படுகின்றன.

**உணவு சார்ந்த புதுமைகள்**

மனிதனுக்கு உணவு அடிப்படைத் தேவையாக இருப்பதனால் தன்னை நாடி வரும் மக்களுக்கு வயிறார அப்பங்களை உணவாக அளித்து சில உணவு சார்ந்த புதுமைகளைச் செய்தார். அவை, அப்பங்களை அதிகரிக்கச் செய்தது. மக்களின் குறைககளை நீக்கி கானாவூர் திருமணத்தில் தண்ணீரை திராட்சை இரசமாக்கியது, இதுபோன்ற புதுமைகள் உணவு சார்ந்தவைகளாகக் கருதப்படுகின்றன.

**இயற்கை சார்ந்த புதுமைகள்**

இயேசு இறைமகன் என்பதாலும் இறைவனின் வல்லமை கொண்டிருததாலும் அவரால் அனேகப் புதுமைகளைச் செய்ய முடிந்தது. இயற்கைகூட இசைவு தந்தது என அறியமுடிகிறது. இதன் நிமித்தம் இயற்கை சார்ந்த புதுமைகளைச் செய்தார். அவை, காற்றையும் கடலையும் அடக்கியது, கடல் மீது நடந்தது. என இரு புதுமைகள் ஆகும். இத்தகைய இயற்கை சார்ந்த புதுமைகள் மட்டுமே ஆய்வுத் தேடலாக இக்கட்டுரையில் அமைகின்றது.

**இயேசு கடல் மீது நடந்தது (மாற் 6:45-52)**

இயேசு கூட்டத்தினரை அனுப்பிக்கொண்டிருந்தார். அப்பொழுது தம் சீடரையும் உடனே படகேறித் தமக்கு முன் அக்கரையிலுள்ள பெத்சாய்யிதாவுக்குச் செல்லுமாறு அவர் கட்டாயப்படுத்தினார். அவர் அவர்களிடமிருந்து விடைபெற்றுக்கொண்டு இறைவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலைக்குச் சென்றார். பொழுது சாய்ந்த பிறகும் படகு நடுக்கடலில் இருந்தது. ஆனால் அவர் தனியே கரையில் இருந்தார். அப்போது எதிர்க்காற்று அடித்தது. சீடர்கள் தண்டு வலிக்கப் பெரிதும் வருந்துவதைக் கண்ட அவர் கடல்மீது நடந்து அவர்களை நோக்கி வந்தார். அவர்களைக் கடந்து செல்ல விரும்பினார். அப்போது ஏறக்குறைய நான்காம் காவல் வேளை. அவர் கடல்மீது நடப்பதைக் கண்டு அதுபேய் என்று எண்ணி அவர்கள் அலறினார்கள். ஏனெனில் எல்லாருமே அவரைக் கண்டு அஞ்சிக் கலங்கினர். உடனே இயேசு அவர்களிடம் பேசினார். துணிவோடிருங்கள் நான்தான் அஞ்சாதீர்கள் என்றார். பிறகு அவர்களோடு படகில் ஏறினார். காற்று அடங்கியது. அவர்கள் மிகமிக மலைத்துப்போனார்கள். ஏனெனில் அப்பங்கள் பற்றிய நிகழ்ச்சியை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை. அவர்கள் உள்ளம் மழுங்கிப் போயிருந்தது.

இவ்வாறு இயேசு கடல் மீது நடந்தார் என்று புதுமை மாற்கு நற்செய்தியில் காணப்படுகின்றது. இப்புதுமை மற்ற நற்செய்திகளான மத்தேயு (14:22-33) மற்றும் யோவான் (6:15-21) இரு நூல்களிலும் காணமுடிகிறது. ஆனால் லூக்கா நற்செய்தியில் இப்புதுமைப்பற்றி குறிப்பிடவில்லை என அறியமுடிகிறது.

**இயேசு கடல்மீது நடந்த புதுமையும் நெய்தல் நிலப் பொருத்தப்பாடும்**

இயேசு கடல்மீது நடந்தார் என்ற புதுமை நிகழ்ந்த இடம் கடல் என அறியப்படுகிறது. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும் என்பதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்கு உரியது எனக் கருதலாம். "பொழுது

சாய்ந்த பிறகும் படகு கடலில் இருந்தது" [10] (மாற் 6:47) என்பதைக் காணும்போது மாலை வேளை (எற்பாடு) என்று பொழுது துல்லியமாக குறிப்பிடப்பட்டு உள்ளதால் இப்புதுமையை நெய்தல் நிலத்திற்குரியதாகக் கருதலாம். மேலும் "இயேசு கடல்மீது நடந்து சீடர்களை நோக்கி வந்தார். அவர்களைக் கடந்து செல்ல விரும்பினார். அப்போது ஏறக்குறைய நான்காம் காவல் வேளை." [11] (மாற் 6:48) இங்கு நான்காம் காவல் வேளை என்பது கதிரவன் மறைகின்ற நேரம் மாலைப் பொழுது 2-6 மணி (எற்பாடு) என மிகத் துல்லியமாக நான்காம் காவல் வேளை என்று பொழுதைக் குறிப்பதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்குரியதாகக் கருதலாம்.

"எதிர்க்காற்று அடித்துக்கொண்டிருந்ததால் தண்டு வலிக்கப் பெரிதும் வருந்திக் கொண்டிருந்தார்கள் சீடர்கள்" [12] (மாற் 6:48) என்பதை உற்று நோக்கும் போது சீடர்கள் மீன் பிடித்துக் கொண்டு இருந்தனர் என்பது புலனாகிறது. இங்கு மீன் பிடித்தல் மற்றும் நாவாய் செலுத்துதல் என்பது அவர்களின் தொழிலைக் குறிக்கிறது. குறிப்பாக இயேசுவின் சீடர்கள் மீனவர்களாக இருந்தனர் என்பதைத் திருவிவிலியத்தில் மற்றொரு இடத்தில் காணமுடிகிறது. "இயேசு கலிலேயக் கடலோரமாய் நடக்கும்போது சகோதரர் இருவரைக் கண்டார். ஒருவர் பேதுரு எனப்படும் சீமோன் மற்றவர் அவர் சகோதரரான அந்திரேயா. மீனவரான அவ்விருவரும் கடலில் வலைவீசிக் கொண்டிருந்தனர். இயேசு அவர்களைப் பார்த்து என் பின்னே வாருங்கள் நான் உங்களை மனிதரைப் பிடிப்பவர் ஆக்குவேன் என்றார். உடனே அவர்கள் வலைகளை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றினர்கள்." [13] (மத் 4:18-20) இக்கூற்றிலிருந்து இயேசுவின் சீடர்கள் ஒருசிலர் மீனவர்களாக இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இந்த மேற்கோளின் தொடர்ச்சியைக் மத்தேயு நற்செய்தியில் காணும் போது மற்ற சீடர்களும் சபதேயுவின் மகன் யாக்கோபும் அவர் சகோதரரான யோவனும் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்து வந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. ஆகவே மீன் பிடிக்கும் தொழில் என்பது நெய்தல் நிலத்திற்குரியது எனக் கருதப்படுவதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்குரியது எனக் கருதலாம்.

இயேசு கடல் மீது நடந்து வருவதை அறிந்த இயேசுவின் சீடர் பேதுரு என்பவர் "நீர்தாம் என்றால் நானும் கடல் மீது நடந்து உம்மிடம் வர ஆணையிடும் என்றார். அவர் வா என்றார். பேதுருவும் படகிலிருந்து இறங்கி இயேசுவை நோக்கிக் கடல்மீது நடந்து சென்றார். அப்பொழுது பெருங்காற்று வீசியதைக் கண்டு அஞ்சி அவர் மூழ்கும்போது ஆண்டவரே என்னைக் காப்பாற்றும் என்று கத்தினார்." [14] (மத் 14:28-30) கடல்மீது நடத்தல் என்பது மனித சக்திக்கு அப்பாற்பட்டது. கடலில் நீந்தலாம் ஆனால் நடத்தல் என்பது சாத்தியமானதாகத் தெரியவில்லை. ஆனால் இங்கு இயேசு கடல்மீது நடந்தார் என்பதைக் காணும்போது இயேசு உண்மையில் இறைமகன் என்பதாலும் இறைவல்லமையோடு இருந்தார் என்பதாலும் கடல் மீது அவரால் நடக்க முடிந்தது என அறியப்படுகிறது. மேலும் பேதுரு என்பவரால் கடல்மீது நடக்க முடியவில்லை காரணம் அவர் மனிதத் தன்மையிலும் நம்பிக்கை குன்றியவராய் இருந்ததாலும் அவருக்கு அது சாத்தியமாக அமையவில்லை என அறியப்படுகிறது. "படகில் இருந்தோர் இயேசுவைப் பணிந்து உண்மையாகவே இறைமகன் என்றனர்." [15] (மத் 14: 33) இக்கூற்றும் மேலே குறிப்பிட்ட கூற்றும் இயேசுவை உண்மையில் இறைமகன் என்பதை மக்கள் புரிந்துகொண்டனர்.

இப்புதுமையை ஆராய்ந்து பார்க்கும்போது இப்புதுமையில் கடல், படகு, எற்பாடு (பொழுது), மீன் பிடிக்கும் தொழில் இதுபோன்ற, முதற்பொருளும் கருப்பொருள்களுல் சில காணப்படுவதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்குரியது எனக் கருதலாம்.

### இயேசு காற்றையும் கடலையும் அடக்கியது (மாற் 4:35-41)

அன்றொரு நாள் மாலை நேரம். இயேசு சீடர்களை நோக்கி அக்கரைக்குச் செல்வோம் வாருங்கள் என்றார். அவர்கள் மக்கள் கூட்டத்தை அனுப்பிவிட்டு படகில் இருந்தவாறே அவரை கூட்டிச் சென்றார்கள். வேறு படகுகளும் அவருடன் சென்றன. அப்பொழுது ஒரு பெரும் புயல் அடித்தது. அலைகள் படகின் மேல் தொடர்ந்து மோத, அது தண்ணீரால் நிரம்பிக் கொண்டிருந்தது. அவரோ படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார். அவர்கள், போதகரே சாகப்போகிறோமே உமக்குக் கவலையில்லையா? என்று சொல்லி அவரை எழுப்பினார்கள். அவர் விழித்தெழுந்து காற்றைக் கடிந்துகொண்டார். கடலை நோக்கி, இரையாதே அமைதியாயிரு என்றார். காற்று அடங்கியது. மிகுந்த அமைதி உண்டாயிற்று. பின் அவர் அவர்களை நோக்கி ஏன் அஞ்சுகிறீர்கள் உங்களுக்கு இன்னும் நம்பிக்கை இல்லையா? என்று கேட்டார். அவர்கள் பேரச்சம் கொண்டு, காற்றும் கடலும் இவருக்குக் கீழ்ப்படிகின்றனவே இவர் யாரோ? என்று ஒருவரோடு ஒவருவர் பேசிக்கொண்டார்கள்.

இவ்வாறு இயேசு காற்றையும் கடலையும் அடக்கினனார் என்ற புதுமை மாற்கு நற்செய்தியில் காணப்படுகின்றது. இப்புதுமையை மத்தேயு (8:23-27) மற்றும்

லூக்கா (8:22-25) ஆகிய இரு நற்செய்திகளில் காணலாம். ஆனால் யோவான் நற்செய்தியில் இப்புதுமைபற்றிக் கூறவில்லை என அறியப்படுகிறது.

## இயேசு காற்று, கடல் அடக்கிய புதுமையும் நெய்தல் நிலப் பொருத்தப்பாடும்

இயேசு காற்றையும் கடலையும் அடக்கினார் என்ற புதுமை நிகழ்ந்த இடம் கடல் என அறியப்படுகிறது. கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும் என்பதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்கு உரியது எனக் கருதலாம். இப்புதுமையில் "மாலை நேரம்" [16] (மாற் 4:35) என்பது பொழுது சாயும் வேலை (எற்பாடு) என்று பொழுது துல்லியமாக குறிப்பிடுவதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்குரியது எனக் கருதலாம். மேலும் "வேறு படகுகளும் அவருடன் சென்றன" [17] (மாற் 4:36) என்பதிலிருந்து மற்றவர்களும் மீன் பிடிக்கச் சென்றுகொண்டிருந்தார்கள் என்பதை அறியமுடிகிறது. எனவே மீன் பிடிக்கும் தொழில் என்பது நெய்தல் நிலத்திற்குரியது என அறியப்படுகிறது. கடலில் பெரும் புயல் அடித்ததால் அலைகள் படகின் மீது மோதி தண்ணீரால் படகு நிரம்பியதைக் கண்டு பயந்து சீடர்கள் தூங்கிக்கொண்டிருக்கும் இயேசுவை எழுப்பி இச்சூழ்நிலையிலிருந்து எங்களைக் காப்பாற்றும் என்றதும். இயேசு "கடலை நோக்கி இரையாதே அமைதியாயிரு. காற்று அடங்கியது. மிகுந்த அமைதி உண்டாயிற்று." [18] (மாற் 4:39) இதைக் கண்ட சீடர்களும் மற்றவர்களும் "காற்றும் கடலும் இவருக்கு கீழ்படிகின்றனவே இவர் யாரோ என்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள்." [19] (மாற் 4:41) இக்கூற்றிலிருந்து இயேசு உண்மையில் இறைமகன் என்று அறியப்படுகிறது.

இப்புதுமையை ஆராய்ந்து பார்க்கும்போது இப்புதுமையில் கடல், படகு, எற்பாடு (பொழுது), மீன் பிடிக்கும் தொழில் இதுபோன்ற, முதற்பொருளும் கருப்பொருள்களுல் சில காணப்படுவதால் இப்புதுமை நெய்தல் நிலத்திற்குரியது எனக் கருதலாம்.

இயற்கைச் சார்ந்த இவ்விரு புதுமைகளை நெய்தல் நிலத்திற்குரியவையா? என்று ஆராயும்போது நெய்தல் நிலத்திற்குரிய முதற்பொருளும் மற்றும் கருப்பொருள்களுல் சில காணப்படுவதால் இவ்விரு புதுமைகளும் நெய்தல் நிலத்திற்குரியவை எனக் கருதலாம். ஆனால் உரிப்பொருள் பற்றிய செய்திகள் எதுவும் காணப்படவில்லை எனவும் அறியமுடிகிறது.

## மதிப்பீடு

கடலும் கடல் சார்ந்த இடமும், கார், இளவேனில், முதுவேனில் ஆகிய பெரும்பொழுதுகளும் எற்பாடு ஆகிய சிறுபொழுதுமே நெய்தல் திணையின் முதற்பொருள்களாகும்.

- கருப்பொருள்களில் பூவும், பறவைகளும் எந்தநிலத்திற்குரியவை எனக் கூறப்பெற்றவை, பிற நிலங்களில் வந்தாலும் அந்த நிலத்தின் கருப்பொருளாகவே கொள்ள வேண்டும் என்பது தெளிவாகிறது.
- நெய்தல் நிலத்திற்கான அக ஒழுக்கம் என்பது இரங்கலும் இரங்கல் நிமித்தமும் ஆகும். புற ஒழுக்கம் என்பது அரசர்கள் பகையின் காரணமாக எதிர் எதிர் நின்று போரிடுதல் ஆகும். போரின் போது போர் வீரன் தும்பைப் பூச்சூடி போருக்குச் செல்வான் என்பது அறியப்படுகிறது.
- இயேசுவின் இயற்கை சார்ந்த இரு புதுமைகள் கடலில் நிகழ்ந்தன எனவும் இவை நிகழ்ந்த நேரம் மாலைநேரம் நான்காம் காவல் வேளை (எற்பாடு) எனவும் சீடர்கள் கடலில் மீன்பிடிக்கும் தொழில் செய்து கொண்டிருந்தார்கள் எனவும் நெய்தல் நிலத்திற்குரிய முதற்பொருள் மற்றும் கருப்பொருள்கள் சில காணப்படுவதால் இப்புதுமைகள் நெய்தல் நிலத்திற்குரியவை என அறியப்படுகிறது.

## குறிப்புகள்

1. ச.வே சுப்பிரமணியன், தொல்காப்பியம், ப.354.
2. மேலது, ப.354.
3. மேலது, ப.356.
4. பி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கியங்களில் நெய்தல் நிலம், ப.33.
5. மேலது, ப.28.
6. ச.வே சுப்பிரமணியன், தொல்காப்பியம், ப.358.
7. மேலது, ப.360.
8. ச.வே சுப்பிரமணியன், தொல்காப்பியம், ப.358.
9. க. ஜவஹர், திணைக்கோட்பாடும் தமிழ்க் கவிதையியலும், ப.56.
10. மாற்கு, மாற்கு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.62.
11. மேலது, ப.62.
12. மேலது, ப.62.
13. மத்தேயு, மத்தேயு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.8.
14. மேலது, ப.26.
15. மேலது, ப.26.
16. மாற்கு, மாற்கு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப.58.
17. மேலது, ப. 58.
18. மேலது, ப.58.
19. மேலது, ப.58.